1973 மார்ச் 26]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பெண்களுக்கும் அப்படிப் பட்ட பள்ளி ஒன்று சென்னையில் கீழ்ப்பாக்கத்தில் இருக்கிறது.

பாசனக்குளங்கள் சீரமைப்பு.

* 517 வின : திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

நடப்பாண்டில் தமிழ்நாட்டில் நீர் பாசனத் திட்டங்களின் கீழ் எத்தனை பாசனக் குளங்கள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : நடப்பாண்டில் தமிழ் நாட்டில் நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 2,273 பாசனக்குளங்கள் அபி விருத்தி செய்யப்பட இருக்கின்றன.

திரு, எஸ். கணேசன் : இதற்காகச் செலவிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ? இப்படிச் சீரமைப்புச் செய்வதன் காரணமாக புதிதாக எவ்வளவு விளைநிலங்கள் பயன்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா : தூர் வாருதல், பண்படுத்தல் திட்டம் முழுமையாகவும், பகுதியாகவும் தூர் ஏறி விட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும், முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன் மூலம் இழந்த முழு சேமிப்பு அளவில் ஒரு பகுதியை அல்லது முழு அளவை யும் மீட்கவும் இத்திட்டத்தின் கீழ் கருதப்பட்டுள்ளது.

மாவட்ட வாரியான எண்ணிக்கை—தஞ்சாவூர் 55, வட ஆற்காடு 82, மதுரை 282, தென் ஆற்காடு 119, இராமநாதபுரம் 889, திருநெல்வேலி 264, கன்னியாகுமரி 68, திருச்சி 311, சேலம் 9, தர்மபுரி 7, செங்கற்பட்டு 187.

செலவான விவரங்கள் இப்போது இல்லை.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி தொகுதியில் வரதாநதி அணைக் கட்டுத் திட்டத்தின் கீழ் ஐயங்குளத்தில் நீர்ப்பாசனத் திட்டம் ஏற் படுத்திக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஐயன்குளம் பற்றிச் சொன்னார்கள். அதற்கான திட்டம் நடைமுறையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, what is the usual time taken for improving these tanks ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்படுகிற பணிகளை ஐந்தாண்டுக்கு ஒரு முறை நிறைவேற்றப் படுகின்றன. சிறு சிறு திட்டங்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. 2 மாதம், 3 மாதம், 15 நாட்களில் கூட காரியங்கள் நடக்கின்றன.

Chembarambakkam tank.

*518—THIRU R.R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) whether it is a fact that improvements are being made to the Chembarambakkam tank in Chingleput district ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) செம்பரம்பாக்கம் ஏரியில் பின்வரும் சீரமைப்புகள் செய்யக் கருதப்பட்டுள்ளன :

1. ஏரிக்கரை சீரமைத்தல்—ரூ. 7 லட்சம்.

2. உபரிநீர் வழிந்தோடுவதற்கான ஏற்பாடுகளைச் சீரமைத்தல்—ரூ. 22 இலட்சம்.

3. பங்கீட்டுக் கால்வாய் ஏற்பாடுகளைச் சீரமைத்தல்—ரூ. 30 இலட்சம்.

4. இவ்விடத்தைப் பொழுது போக்கு இடமாகவும் சுற்றுலா நிலைய மாகவும் மாற்றுவதற்காக பொதுவான சீரமைப்புகள்—ரூ. 7 லட்சம்.

முதல் நிலைப் பணிகளுக்கான செலவுக்கு அரசு 1972 நவம்பரில் ஒப்பளிப்பு வழங்கியது.

திரு. ரா. ரா. முனுசாமி : தமிழகத்தில் இருக்கும் பெரிய பெரிய ஏரிகளைச் சீரமைக்கின்றபோது ஏராளமான தொகை தேவைப்படுகிறது. இதற்கு மத்திய சர்க்கார் தனியாக மானியம் தருகிறதா ? இல்லா விட்டால் மதுராந்தகம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி போன்ற ஏரிகளைச் சீரமைக்க தனியாக நிதி மத்திய அரசிடமிருந்து கேட்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா ; இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரை சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட வேலைகளின் கீழ் அனுமதி கொடுக்கப்படுகிறது. இந்தத் திட்டத் திற்காக மத்திய அரசாங்கத்தை எந்த உதவியும் கேட்கவில்லை.